**செய்தி வெளியீடு எண். 609** **நாள்– 21.07.2010**

ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 600 006.

<u>பத்திரிக்கை செய்தி</u>

"அனைவருக்கும் வேலை வழங்கக் கோரி " மாற்றுத் திறனாளி ஆசிரியர்கள்
உண்ணாவிரதம் சம்பந்தமான செய்தி குறிப்பு

––

2007–08, 2008–09 கல்வியாண்டிற்கான தமிழ் வழியில் இடைநிலை ஆசிரியர் 5580 காலிப் பணியிடங்களில் 56 பணிநாடுநர்கள் முதற்கட்டமாகவும் பின்னர் 112 பணிநாடுநர்களும் மொத்தமாக 168 மாற்றுத் திறனாளி பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2009–10ம் ஆண்டு தமிழ் வழியில் மொத்த காலிப் பணியிடம் 1943 பணியிடங்களுக்கு, 57 மாற்றுத் திறனாளி பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆக மொத்தம் 225 மாற்றுத் திறனாளி பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது மட்டுமல்லாது ஆதி திராவிட நலத்துறை மூலமாக 2008–09 ல் கல்வியாண்டிற்கு 354 பணியிடங்களில் 11 மாற்றுத் திறனாளி பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என இதன் மூலம் தெரிவிக்கலாகிறது. மேலும் 2010–11 கல்வியாண்டில் நிரப்பப்பட வுள்ள 1743 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் வேலை வாய்ப்பக பதிவு முன்னுரிமை அடிப்படையில் தகுதியுடைய நாடுநர்களின் சான்றிதழ்கள் அனைத்தும் சரிபார்ப்பு செய்யப்பட்டு தேர்வு செய்யப்படும் நாடுநர்களில் 3 சதவிகித இடஒதுக்கீட்டின்படி 52 மாற்றுத் திறனாளிகள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என்பதும் தெரிவிக்கலாகிறது.

தலைவர்

ஆசிரியர் தேர்வு வாரியம்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**